(ஆ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

(இ) சென்ற ஆண்டு பால்வள நிறுவனத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். 1991-92 நிதியாண்டில் நஷ்டத்தில் இயங்கி வந்தது. 1992-93 ஆம் ஆண்டில் சீராகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) கொள்முதல் விலைக்கும் விற்பனை விலைக்கும் இடைப்பட்ட முரண்பாடே முக்கிய காரணம்.

(இ) சென்ற ஆண்டு கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு அறிக்கை பெற்ற பின்னரே சரிவர கூற இயலும். மாதத்திற்கு ரூ. 103 லட்சமும், ஆண்டிற்கு ரூ. 1,250 லட்சமும் கொள்முதல் மற்றும் விற்பனை விலை முரண்பாடு காரணமாக பற்றாக்குறை ஏற்படுகிறது.

முற்பகல் 10-15

திரு. டி. எம். ரங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால்வளத் துறையிலே வெண்மைப்புரட்சி செய்தவர் நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள். அதற்குப் பின்னால் இடைப்பட்ட காலத்தில் வந்த தி.மு.க. அரசிலேதான், அதிகார துஷ்பிரயோகத்தின் காரணமாக, இந்தத் துறைக்கு நஷ்டம் ஏற்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நஷ்டம் சீர் செய்யப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்திலே, இந்த நஷ்டத்திற்குக் காரணமாக இருந்தவர்கள் மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆய்வு செய்யப்பட்டு, தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 644, திரு. செ. பெருமாள், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

[1992 ஏப்ரல் 27

644—

குமஸ்தம்பட்டியில் உறைவிடப் பள்ளி.

*3990 திரு. செ. பெருமாள்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டம் ஏற்காடு தொகுதியில் இடையப்பட்டி ஊராட்சி குமஸ்தம்பட்டியில் உறைவிடப் பள்ளி தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடையப்பட்டி ஊராட்சி, குமஸ்தம் பட்டியில் அதிகமாக பழங்குடியினர் வாழ்கிறார்கள். பழங்குடியினர்களுடைய குழந்தைகள் பயன் பெறும் வகையிலே, அடுத்த ஆண்டிலாவது மீண்டும் பரிசீலனை செய்து, உறைவிடப் பள்ளி அமைத்துத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குமஸ்தம்பட்டி கிராமத்தில் 4 பழங்குடியின மாணவ, மாணவியர் மட்டுமே சேரக்கூடிய நிலையில் இருக்கிறார்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தகவல் கொடுத்து இருக்கிறார்கள். ஆகையினால், பள்ளி தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடையப்பட்டி ஊராட்சியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் அதிகமாக வாழ்கிறார்கள். எனவே, மீண்டும் அரசு பரிசீலனை செய்து, ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்கள் பயன்பெறும் வகையில், உண்டு உறைவிடப் பள்ளியைக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

1992 ஏப்ரல் 27]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடையப்பட்டி ஒன்றியம், குமஸ்தம்பட்டியில் பள்ளியில் சேரக்கூடிய மாணவர்களுடைய எண்ணிக்கை மிகக் குறைவு என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தகவல் தந்திருக்கிற காரணத்தால், இதை மேலும் பரிசீலிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 645, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

645—

பனைமரம் தொடர்பான தொழிற்சாலை அமைத்தல்

*4187 டாக்டர் வெ. சரோஜா:

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தொழில் துறையில் பின்தங்கிய சங்ககிரி தொகுதிக்குட்பட்ட எலச்சிபாளையம், மல்லசமுத்திரம் ஆகிய ஒன்றியங்களில் பனைமர தொழிலாளர்கள் அதிகம் இருப்பதால் அது தொடர்பான தொழிற்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரி தொகுதிக்கு உட்பட்ட மல்லசமுத்திரம் மற்றும் எலச்சிபாளையம் ஆகிய இரண்டு ஒன்றியங்களிலும், 10 பஞ்சாயத்திற்கு மேற்பட்ட 11 கிராமங்கள், பனைமரத் தொழிலாளர்கள் நிறைந்த கிராமங்களாக இருக்கின்றன. சுமார் 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் பனைமரத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்வு மலர அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லசமுத்திரம் மற்றும் எலச்சி